


**Population in China:**
1,800 (1998)
1,880 (2000)
2,320 (2010)
**Location:** Sichuan
**Religion:** Tibetan Buddhism
**Christians:** None Known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:**

**மக்கள்தொகை:** 1,800 (1998 AMO)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஷியங், அர்சு மொழி

**மொழி வழக்குகள்:** 0

**புத்த மதம்:** 100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** YMY00

**கிறிஸ்துவத்தின் நிலை**




**வசிப்பிடம்:** ஏறக்குறைய 1500 லிருந்து 2000 ம் வரையிலான மான்யக் மொழி பேசும் மக்கள் தெற்கு சிசுவான் மாகாணத்தின் மறைவான மற்றும் குறைந்த மக்கள் தொகையுடைய மலைப் பகுதிகளில் வசிக்கின்றனர். இவர்களுடைய சரியான வசிப்பிடம் தெரியாவிட்டாலும் இவர்கள் சின்சின்(Shinjin) , என்யுஅன் (Yanyuan), கன்லுஒ (Ganluo), யுயெஷி (Yuexi) , மியன்னிங் (Mianning), மூளி (Muli) மற்றும் சிவ்லோங் (Jiulong) பகுதிகளில் வசிக்கும் அர்சு (Ersu) என்ற பெரிய இனத்தின் ஒரு பகுதியினர் ஆவார்கள்.

**அடையாளம்:** மான்யக் மொழி பேசும் மக்கள் அதிகாரப்பூர்வமாக திபெத்தியர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். மான்யக் மற்றும் மின்யக் வெவ்வேறு இனங்களாகும். மின்யக் இனத்தவர்கள் மான்யக் மக்களுடைய வசிப்பிடத்திலிருந்து தொலைவில் வடபகுதியில் வசிக்கின்றனர். ஜோசப் ராக் கி.பி. 1920ல் மூளிக்குச் சென்றபோது இவர்களைப்பற்றிச் சொன்னதாவது " உலகிலேயே மிகக்குறைந்த ஜனங்களுக்கு மட்டுமே தெரிந்த இடம் இந்த மூளி முடியரசாகும். சீனர்களால் ஷிபன் (Xifan) அல்லது மேற்கத்தியக் காட்டுமிராண்டிகள் என்று அறியப்படும் இந்த முடியரசைப்பற்றியோ அல்லது இங்கு வசிக்கும் மக்களைப்பற்றியோ எந்த ஒரு காரியமும் இதுவரை எழுதப்படவில்லை. கடந்த 100 வருடங்களுக்குள் இந்த வழியாகக் கடந்து சென்ற ஐரோப்பியர்களை ஒரு கையின் விரல்களால் எண்ண முடியும்.

**மொழி:** குறைவானவர்கள் மட்டுமே இவர்களைப் பற்றி அறிந்திருந்தாலும் மான்யக் மொழி பற்றிய விளக்கம் ஹோட்சன் மூலமாகக் கி.பி.1874 லியே தரப்பட்டது. மான்யக் மொழி பர்மிய திபெத்திய மொழியின் ஷியங் (Qiangic) கிளையைச் சேர்ந்தது. மொழியியலாளர் ஜேக்சன் சுன் மான்யக் மொழியை அர்சு மொழி என்று அடையாளம் கொடுத்திருக்கிறார்.

**வரலாறு:** மான்யக் மக்களுடைய வரலாறு மூளி முடியரசுடன் இணைந்த ஒன்றாகும். கி.பி. 1950ல் கம்யூனிஸ்ட்கள் இந்த முடியரசின் ஆட்சியை வீழ்த்தும் வரைக்கும் மான்யக் மக்கள் வாழ்கையில் இந்த முடியரசின் ஆதிக்கமே இருந்தது. டாலியாங்க்ஷன் (Daliangshan) மலைப்பகுதிகளிருந்து அடிக்கடி தாக்குதல் நடத்தும் நோசு (Nosu) இனத்தவர்களின் தாக்குதலை முறியடிக்கும்படி இவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டு இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர் .

**பழக்கவழக்கங்கள்:** இவர்கள் ஒரு கடினமான வாழ்க்கை நடத்தக்கூடியவர்கள். விவசாயத்தில் இவர்களுடைய முயற்சி செங்குத்தான சாய்வுகளினிமித்தம் தோல்வியடைந்தது. ஜோசப் ராக் இவ்வாறு விளக்கம் கொடுக்கிறார் "இந்த முடியரசு மிகவும் கடுமையான மலைப்பகுதியிலிருப்பதால் மஞ்சள் நதி மற்றும் அதன் கிளைகளின் ஓரம் மட்டுமே சாகுபடிசெய்யமுடியும். ஊட்டச்சத்து மற்றும் சுகாதார குறைவினால் பெரும்பாலான மான்யக் இனத்தவர்கள் தங்களுடைய 40வது வயதை எட்டுமுன்பே இறந்து விடுகின்றனர்.



**மதம்:** மான்யக் மக்கள் திபெத்திய புத்த மதத்தின் மஞ்சள் தொப்பிப் பிரிவைச் சேர்ந்தவர்கள். "இவர்களுடையமேல்அங்கிஎப்பொழுதும்சிகப்பு நிறமாகவே இருந்தாலும் வித்தியாசமான காரியம் இவர்களுடைய சடங்காச்சார மஞ்சள் தொப்பி ஆகும். ஒரு குடும்பத்தின் ஐந்து ஆண்களில் இரண்டு அல்லது மூன்று ஆண்பிள்ளைகள் லாமாக்கள் ஆவது வழக்கமான காரியம். மூன்று ஆண்பிள்ளைகள் மட்டுமே உள்ள குடும்பத்தில் இரண்டுபேர் லாமாக்கள் ஆனால் மூன்றாவது குமாரன் சந்ததியைப் பெருகச்செய்ய அநேக ஸ்திரீகளைத் திருமணம் செய்வதும் வழக்கமான காரியம்." மான்யக் மக்கள் ஆவிவழிபாடு மற்றும் பலி செலுத்துவதில் ஈடுபாடுள்ளவர்கள். இவர்கள் எப்பொழுதுமே சக்திவாய்ந்த துர்தேவதைகள் மற்றும் தெய்வங்களைப் பற்றிய பயத்துடன் வாழ்வதைக் காணமுடியும். இந்தத் தேவதைகளைப் பிரியப்படுத்தாவிட்டால் தங்களை இவை வருத்தும் என்ற பயம் இவர்களுக்கு எப்பொழுதுமே உண்டு.

**கிறிஸ்துவம்:** மான்யக் மக்கள் மிகவும் தேவையிலுள்ள சந்திக்கப்படாத இனத்தவர்கள் மத்தியில் ஓர் இனமாவர்கள். மிகப்பெரும்பாலானோர் இயேசு கிறிஸ்துவின் பெயரைக் கேட்டிராதவர்கள். இவர்கள் சாட்சி இல்லாத நிலையில் ஆவிக்குரிய குருட்டாட்டத்தில் புத்த மதத்தின் கட்டுக்குள் வாழ்பவர்கள். இவர்களுடைய தாய்மொழியில் வேதாகமம், சுவிசேஷ வானொலி, இயேசுவின் திரைப்படம் மற்றும் ஒலித் தட்டுக்கள் இல்லாத நிலையில் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பு இவர்களுக்கு மிகவும் குறைவு.